மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவரவர்களே, காஞ்சீபுரம் துணை வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து வேலைக்கு ஆட்களை 'கால் பார்' செய்யும்போதெல்லாம் சென்னையிலிருக்கின்ற வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து தான் ஆட்களை வரவழைக்கிறார்கள். அதனால் காஞ்சீபுரத்தில் பதிவு செய்யக் கூடியவர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்க வில்லை என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே, தற்போது அதுபற்றிய விவரங்கள் இல்லை. ஆனால் அது, குறித்து அரசு பரிசிலித்து ஆவன செய்யும்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவரவர்களே, இதைப் போன்ற வேலை வாய்ப்பு அலுவலகங்களைப் புதிதாக திறக்க அரசுக்கு உத்தேசம் ஏதாவது உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே, 1981-82 ஆம் ஆண்டுக்கான இரண்டாம் பிரிவுத் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டம் மேட்டூரில் ஒரு துணை வேலைவாய்ப்பு அலுவலகமும், இராமநாதபுரம் மாவட்டத்தில் விருதுநகரில் ஒரு துணை வேலைவாய்ப்பு அலுவலகமும் திறக்கப்படுவதற்கான செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்

பவானி எஸ். எஸ். எம். நூற்பாலையில் வேலை நிறுத்தம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் என்.வி.என். சோமு, அ. ரகுமான்கான் ஆகியோர் ''சேலம் மாவட்டம் பவானி எஸ். எஸ். எம். நூற்பாலையில் நடைபெறும் வேலை நிறுத்தத்தினால் 15-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் கைது

செய்யப்பட்டிருப்பதும் அதனால் அங்கு பதட்ட நிலை எழுந்துள்ளது குறித்தும் விவாதிக்க பேரவையில் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவர திரு. என். வி. என். சோமு அவர்கள் அனுமதி கேட்டுள்ளார்கள். திரு. அ. ரகுமான்கான் அவர்களும் அனுமதி கேட்டுள்ளார்கள். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத் தலைவரவர்களே, எஸ்.எஸ்.எம். குரூப்பினுடைய போக்கு நிர்வாகம் இன்றைக்கு தொழிலாளர்களுக்கு விரோதமான களை அங்கே கையாண்டுக் கொண்டிருக்கிறது. அங்கே இருக்கக்கூடிய 1,200-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் தங்களுடைய நியாயபூர்வமான, சட்டப்பூர்வமான கோரிக்கைகளை வலியுறுத்தி, தொடர்ந்து ஒரு மாதத்திற்குமேலாக போராடி வருகிறார்கள். அந்தப் போராட்டத்தினுடைய அடிப்படையை மறைக்கின்ற நோக்கத்தோடு இன்றைக்கு அந்த நிர்வாகம் வன்முறையைத் தூண்டிவிட்டிருக்கிறது; குண்டர்களை ஏவிவிட்டு அங்கே முற்றுகை நடத்திக்கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல. இன்றைக்கு இந்த எஸ்.எஸ்.எம். குரூப்பிலே இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு சட்டரீதியாக எந்தவிதமான உரிமையும் வழங்கப்படவில்லை. இன்றைக்கு இருக்கின்ற தொழில் சட்டப் பிரிவின்கீழ் அவர்களுக்கு பிராவிடன்ட் வசதி இருக்கிறதா என்றால் இல்லை; அவர்களுக்கு ''கான்டீன்'' வசதி உண்டா என்றால் இல்லை; இ.எஸ்.ஐ. மருத்துவ வசதி உண்டா என்றால் இல்லை; அவர்களுக்கு கூலி உயர்வு உண்டா என்றால் அதுவும் இல்லை. இன்றைக்கு அங்கே ஒரு மஸ்டர் ரோல் கூட கிடையாது. அந்தத் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான வசதியும் இல்லாமல் இன்றைக்கு அங்கே கொத்தடிமைகளாக இருக்கிறார்கள். அவர்களைக் கொத்தடிமைகளாக வைத்து, அவர்களுடைய உழைப்பை அந்த நிர்வாகம் சுரண்டிக்கொண்டிருக்கிறது.

அந்தத் தொழிலாளர்கள் நியாயமான கோரிக்கைகளை வைக்கும் போது, அந்தக் கோரிக்கைகளை மறுப்பது மட்டுமல்லாமல் அவர்களை மிரட்டுவதற்காக வேறு சில கூலி ஆட்களை வைத்துக்கொண்டு, வன்முறையைத் தூண்டிவிடுகிறார்கள். அரசாங்கமும் நிர்வாகத்திற்கு ஆதரவாக இருந்து, போராட்டத்தை ஒடுக்குகின்ற முறையில் போலீசை அனுப்பியிருக்கிறது. இன்றைக்கு 150-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டு, மத்திய சிறையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

[முற்பகல் 10-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 15 பேர்தான் என்று நீங்கள் ஏற்கெனவே கொடுத்த தீர்மானத்தில் குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

திரு அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, நான் தீர்மானம் கொடுத்தது 4—4—1981 அன்று. தாங்கள் 16 நாட்களுக்குப் பிறகு இதை இப்போது எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். ஆனால் தொடர்ந்து கைதானவர்கள் பட்டியல் நீண்டு கொண்டே போகின்றது. இந்தத் தொழிலாளர் பிரச்சினை சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு போகின்ற வழியிலேயே பவானி நகர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் செயலாளர் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்றால் இது எந்த விதத்திலே நியாயம்?

இன்றைக்கு டி.எஸ்.பி. முதல் போலீஸ் வரை பலபேர் அந்தப் பகுதியிலே இருப்பவர்கள் எல்லாம் மாற்றப்பட்டிருக்கிறார்கள். நான் ஒரு கடுமையான குற்றச்சாட்டைச்சொல்ல விரும்புகிறேன். எஸ்.எஸ்.எம். குரூப் நிர்வாகம் சட்டரீதியான தொழிற்சங்க ரீதியான உரிமைகளை அந்தத் தொழிலாளர்களுக்குத் தராமல் அங்கே இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்குச் சட்டத்திற்கு விரோதமான முறையில் அவர்கள் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பலாத்காரத்தைக் கையாண்டு அவர்களைக் கைது செய்கின்ற நிலைமையை ஏற்படுத்தி இருக்கிறார்கள். கன்சிலியேஷன் என்ற வகையிலே பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அதன் அடிப்படையிலே ஒப்புக்கொள்ளப்பட்ட நியாயமான செட்டில்மெண்ட் படி கூட அதனை நிறைவேற்றுவதற்கு அந்த நிர்வாகம் முன்வரவில்லை. அதற்குக் காரணம் இன்றைக்கு ஆளும் கட்சியின் ஆதரவு அதிகமாக இருக்கின்றது என்பதுதான். அங்கே நியாயமான முறையிலே நடந்துகொண்ட போலீசார் கூட அந்தப் பகுதியிலே இருந்து அந்த நிர்வாகத்தின் சம்மதத்தின் பேரிலே அந்த நிர்வாகத்தினைக்காப்பாற்றவேண்டும் என்ற விதத்திலே மாற்றப்பட்டிருக்கிறார்கள். ஆனால் தொழிலாளர்கள் பல பேர் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை தொடர்ந்து இருந்துகொண்டு இருக்கின்றது. ஆகவே இந்தப் பகுதியிலே பதட்ட சூழ்நிலை ஏற்படக்கூடிய வகையிலும் வன்முறையைத் தூண்டுகின்ற வகையிலும் காரியங்கள் நடைபெறுகின்றன. ஆகவே இன்றைக்குத் தொழிலாளர்களுக்கு அடிப்படை உரிமையைக் கொடுக்காத அந்த நிர்வாகத்திற்கு சர்க்காரின் ஆதரவு இருப்பதால், ஆளும் கட்சியின் ஆதரவு இருப்பதால், நம்மை யாரும் அசைக்க முடியாது என்று

அந்த நிர்வாகம் கருதிக்கொண்டிருக்கின்ற காரணத்தால் அவர்கள் போலீசாரை தங்களது கைக்குள்ளே வைத்துக் கொண்டு தொழிலாளர்களுக்கு நியாயமான உரிமையை வழங்க மறுக்கிறார்கள். ஆகவே இன்றையதினம் அங்கே பதட்ட மான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதன் காரணத்தால் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்துவிட்டு இது குறித்து விவாதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே சேலம் மாவட்டம் குமாரப்பாளையத்தில் பல்வேறு நிறுவனங் கள் பவர்லூம், எம்பிராய்டரி, பிராசசிங் தொழிலில் ஈடு பட்டுள்ளன.

அம்மாதிரி நிறுவனங்கள் பலவற்றிற்கும் சேலம் மாவட்ட திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம், சேலம், வேலை நிறுத்த நோட்டீஸ்களை அனுப்பியிருந்தது.

மேற்கூறிய நிறுவனங்களில் பின்வரும் நிறுவனங்களுக்கும், வேலை நிறுத்த நோட்டீஸை தொழிற்சங்கம் அனுப்பியது.

1. வீணா கேலண்டரிங் மில்ஸ்.
2. எஸ்.எஸ்.எம். பிராசசிங் மில்ஸ்.
3. எஸ்.எஸ்.எம். ஷைனிங் சென்டர்.
4. எஸ்.எஸ்.எம். பிரதர்ஸ் (பி) லிமிடெட்.
5. வீணா டெக்ஸ்டைல்ஸ் (பி) லிமிடெட்.
6. புருஷோத்தம் இன்டஸ்ட்ரீஸ்.
7. லட்சுமி அம்மாள் இன்டஸ்ட்ரீஸ்.

இந்தத் தொழிற்சாலைகளில் சுமார் 688 தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள்.

சேலம் மாவட்ட திராவிட பஞ்சாலையைத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம் தனது கோரிக்கைகள் நிறைவேற்றப்படா விடின் 5—3—1981 முதல் வேலைநிறுத்தம் செய்வதாக அறிவித்திருந்தது.

தொழிலாளர்களுக்கு டைம்கார்டுகள் வழங்குதல், ஊதிய உயர்வு, பஞ்சப்படி அதிகரிப்பு, ஹீட் அலவன்ஸ், இடைக்கால நிவாரணம், வேலை நிரந்தரம், சில தொழிலாளர்களை மீண் டும் வேலைக்கு அமர்த்துவது, சீருடை, ஓய்வு விடுதி, வீட்டு வசதி தொழிலாளர்கள் மீது விதிக்கப்பட்ட தண்டனைகளைத் திரும்பப் பெறுவது, பிடித்தம் செய்யப்பட்ட சம்பளப் பணத்தைத் திருப்பி அளிப்பது போன்ற கோரிக்கைகளை முன் வைக்கப்பட்டன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[திரு. இராகவானந்தம்]

இந்தத் தொழிற்தகராறு மீது சேலம், தொழிலாளர் துறை துணை ஆணையர் 6—2—1981 மற்றும் 19—2—1981 தேதிகளில் பேச்சு வார்த்தைகள் நடத்தினார். இதற்கிடையில் 10—2—1981 முதல் மேற்கூறிய தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் ஆரம்பித்தனர். 16—2—1981 அன்று நடந்த பேச்சுவார்த்தைகளில், சேலம், தொழிலாளர் துறை துணை ஆணையர் வழங்கிய அறிவுரைப்படி, தொழிலாளர்கள் 17—2—1981 முதல் வேலைக்குத் திரும்பினர்.

இந்த வேலை நிறுத்தம் சட்ட விரோதமானதாகக் கருதிய நிர்வாகத்தினர், வேலை நிறுத்தம் செய்த ஒவ்வொரு தொழிலாளியின் சம்பளத்திலும், 8 நாட்களுக்கான சம்பளப் பணத்தைப் பிடித்தம் செய்வதாக அறிவித்துள்ளனர்.

மேலும் நிர்வாகம், வேலை நிறுத்த நடவடிக்கைகளில் ஈடுபட்ட 52 தொழிலாளர்களை விசாரணையை எதிர்நோக்கி தற்காலிக வேலை நீக்கம் செய்துள்ளார்கள்.

52 தொழிலாளர்களின் தற்காலிக வேலைநீக்கம் மற்றும் 8 நாள் சம்பளப் பிடித்தம் ஆகிய பிரச்சினையில் பரிகாரம் தேடி, தொழிலாளர்கள் 6—3—1981 முதல் மீண்டும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். இதன் சார்பாக, சேலம் தொழிலாளர் துறை துணை ஆணையர் அவர்கள் முன் நடைபெற்ற சமரசப் பேச்சுவார்த்தைகள் தோல்வியுற்றதால் அவர் தொழிற் தகராறு சட்டம் பிரிவு 12 (4)-ன் கீழ் தனது சமரச முறிவு அறிக்கையை அரசுக்கு 30—3—1981 அன்று அனுப்பியுள்ளார்.

தொழிலாளர்களின் வேலை நிறுத்த நடவடிக்கையை கவனத்தில் கொண்டு, இத் தொழிற்தகராறு, சென்னை தொழிலாளர் துறை இணை ஆணையர் அவர்களால், பேச்சுவார்த்தைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. 7—4—1981 அன்று நடந்த பேச்சு வார்த்தைகளின் போது தொழிலாளர் துறை இணை ஆணையர் இருதரப்பினருக்குமிடையே சுமுக உறவு ஏற்படுத்தும் வகையில், தொழிலாளர்கள் தவறுக்கு வருத்தம் தெரிவிக்கும் பட்சத்தில் 8 நாள் சம்பளப் பிடித்தம் மற்றும் 52 தொழிலாளர்களின் தற்காலிக வேலை நீக்கம் ஆகியவைகளின் சார்பான உத்தரவுகளை ரத்து செய்யப்படலாம் என ஆலோசனை கூறினார்கள். நிர்வாகத்தினர் 8 நாள் சம்பளப் பிடித்தம் விஷயத்தைப பொறுத்த மட்டும், தொழிலாளத் துறை இணை ஆணையர் அவர்களது ஆலோசனையை ஏற்றுக்கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளார்.

[திரு. எஸ். இராகவானந்தம்]

52 தொழிலாளர்கள் தற்காலிக வேலை நீக்கம் சார்பாக நிர்வாகத்தினர் தொழிலாளர் துறை இணை ஆணையர் அவர்களின் ஆலோசனையில் சில மாறுதல்களைக் கோரினார்கள். அதாவது தற்காலிக வேலை நீக்கத்திலுள்ள 52 தொழிலாளர்களில் மிகக் கடுமையான குற்றச் சாட்டுகள் கொண்ட தொழிலாலர்களைப் பொறுத்த மட்டும் தற்காலிக வேலை நீக்கம் தொடரும் எனவும் மிகச் சாதாரணமான குற்றச்சாட்டுகள் கொண்ட தொழிலாளர்களைப் பொறுத்தவரை தற்காலிக வேலை நீக்கம் ரத்து செய்யப்பட்டு அவர்கள் திரும்ப வேலைக்கு அனுமதிக்கப்படுவார்கள். என்றும் கூறினார்கள். இதன் அடிப்படையில் பார்க்கும்போது 52 தொழிலாளர்களில் சுமார் 20 அல்லது 25 தொழிலாளர்கள் தற்காலிக வேலை நீக்கம் ரத்து செய்யப்பட்டு வேலைக்குத் திரும்ப வாய்ப்பு உள்ளது என அறியப்பட்டது.

மீண்டும் 18—4—1981 அன்று பேச்சு வார்த்தை நடத்தினார். நிர்வாகத் தரப்பில் வன்முறை இருந்த காரணத்தால் மேலும் சுமார் 35 தொழிலாளர்களை தற்காலிக வேலை நீக்கம் செய்யவேண்டுமெனக் கருத்து தெரிவித்தனர். எல்லோரையும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென சங்கத்தின் சார்பில் கூறப்பட்டது. கோரிக்கைகளைப் பற்றி பின்னர் விவாதிக்கலாமெனக் கூறப்பட்டது. 40 சதவிகித தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பி விட்டதாக நிர்வாகத்தின் தரப்பில் கூறப்பட்டது. பேச்சு வார்த்தை தொடர இருக்கிறது. நாளைக்கு இங்கே டிமான்ட் இருப்பதால் அதை முடித்துக் கொண்டு, இன்னும் இரண்டு மூன்று தினங்களில் நானே சென்று பேச்சு வார்த்தை நடத்துவதாக இருக்கிறேன். ஆகவே, சமரசம் ஏற்படுத்தும் வகையில் அதிக வாய்ப்பு இருக்கிற காரணத்தால், அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இதுகுறித்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுபிப்னர் ரகுமான்கான் அவர்கள் பேசுகிறபோது,**

என்று சில வரிகளைக் கூறினார்கள். அவைகள் அவைக் குறிப்பில் இருக்கலாமா என்பது குறித்து பரிசீலிக்க வேண்டும் என்றுகேட்டுக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், **

மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[திரு. துரைமுருகன்]

சார் மாண்புமிகு உறுப்பினர் சமரசம் அவர்களுக்கு அனுமதி அளித்தீர்கள். பேசும்பொழுது பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தீர்கள். எங்களுக்கு மட்டும் அனுமதி கிடையாதா? நாங்கள் சொல்வதையும் முழுவதும் கேட்டுக் கொள்ளுங்களேன். எனவே நான் சொல்கிறேன் **

நாங்கள் நிரூபிக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த வாதங்களை எல்லாம் 6 மணிக்கு மேலே வைத்துக் கொள்ளுங்கள் **

என்ற வார்த்தை அவைக் குறிப்பில் வேண்டாம். (குறுக்கீடு) திரு. ரகுமான்கான் அவர்கள் அப்படிச் சொல்லியிருந்தால்தான் நீக்கப்படும். இல்லையென்றால் நீக்க வேண்டிய பிரச்சினையே இல்லை.

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற காரணத்தால் அனுமதி மறுக்கப் பெறுகிறது.

3. தகவல் கோரல்.

உரிமைப் பிரச்சினைக்கு விளக்கம் தருவது.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** (குறுக்கீடுகள்)

[முற்பகல் 10—10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரகுமான்கான், நீங்கள் உட்காருங்கள். அன்றைக்கு நீங்கள் இடத்தில் இல்லாதது தால் பதிலை எழுதி கடிதம் மூலம் அனுப்புங்கள் என்று சொன்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.